1972 ஆகஸ்ட் 12]

இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை தாலுகாவில் உள்ள முத்துப்பட்டி கிராமத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வேங்கடமங்கலம் கிராமத்திலும், திறந்தவெளிச்சிறைச்சாலைகள் அமைக்க தமிழ்நாடு சிறைத்துறை தலைவர் செயற்குறிப்புகள் அனுப்பியுள்ளார். அவைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம்

* 103. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்—மதுரை சாலையை இணைக்கும் வகையில் கரூருக்கு அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் ஒன்று அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் 1972-73-க்கான தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 12¼ லட்சம் ரூபாய்.

வேலூர்—திமிரி மலைப்பாதை

* 104. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 28-10-70 அன்று நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், வேலூரிலிருந்து பாலமதி வழியாக திமிரி வரையில் அமைந்திருக்கும் புதிய மலைப்பாதையைச் செப்பனிட ரூ. 3,75,000 விசேஷ ஒதுக்கீடு செய்யும்படி அரசினரைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அது அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : துணைத் தலைவரவர்களே, இந்த சாலை அமைக்கப்படுவது பற்றி பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள்.